1984 மார்ச் 14]

பெரியார் மாவட்டம் பவானி தொகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள் பயன் பெறுகிற வகையில் அட்டவணைப் புதூரில் சித்தார் அணை அமைக்கும திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. பி. ஜி. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெற இருக்கிறது ? இதற்கு எவ்வளவு ரூபாய் செலவிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய பவானி வட்டத்தில் 2,055 ஏக்கர் புஞ்சை நிலமும், 131 ஏக்கர் நஞ்சை நிலமும் பாசன வசதிபெறும் என்று கருதப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 200 லட்சம் ரூபாய் செலவாகும என்று இப்போது உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வராக நதி நீர்ப்பாசனத் திட்டம்.

261 (*வினா 19592)—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வராகநதி நீர்ப்பாசனத் திட்டத்திற்கு செய்யப்பட்ட செலவு எவ்வளவு ?

(ஆ) அத்திட்டம் சரிவர நீர்ப்பாசனத்திற்குப் பயன்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்குறைகளைச் சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கையென்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ரூபாய் 24,53,284.

[1984 மார்ச் 14

(ஆ) இல்லை. இத்திட்டத்தினால் ஏற்படும் பயன் வராக நதியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையளவை பொருத்திருக்கிறது. நன்றாக மழை பெய்யும்பொழுது நன்மை கிடைத்திருக்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

சின்னவாடம்பட்டியில் ஏரி அமைக்கும் திட்டம்.

315—(*வினா 18358)—திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், கோவை தாலுகா, சர்க்கார் சாமக்குளம் யூனியனுக்குட்பட்ட சின்னவாடம்பட்டியில் கட்டப்படுகிற பெரிய ஏரியின் வேலை எப்பொழுது முடிவடையும் ?

(ஆ) இதனால் பாசன வசதி கிடைக்கும் நிலங்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இத்திட்டம் குறித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்டம் நன்மை தருமென்று கருதப்பட்டு அரசு அனுமதித்தால் திட்ட வேலைகள் துவங்கப்படும்.

(ஆ) 560 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்திலிருந்து கேட்கப்பட்டு வந்த திட்டம். ஆனால் இதுநாள் வரைக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எந்த அரசாங்கத்தாலும எடுக்கப்படாததால், இந்த திட்டம் நின்றுபோய் இருக்கிறது. தற்போது இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முன்னால் இருந்த அமைச்சர் அவர்களை அந்த இடத்திற்கு நாங்கள் அழைத்துச் சென்று, அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்ட பிறகு, இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் இதே சபையில் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தத் திட்டம் துவக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம ? அதைக் கைவிடும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.